*The World of Knowledge*

**SHREE GURUKULAM HIGHER SECONDARY SCHOOL**

Moolavaikkal, Karattadipalayam Post, Gobichettipalayam, Erode District - 638 453, Tamilnadu.

Mobile: 93845 66268, 90039 76268

Website: www.shreegurukulam.org Email Id: shreegurukulam@gmail.com


# SGHSS Newsletter

**PRIME MOTTO**

**QUALITY EDUCATION** | **DISCIPLINE**




# OCTOBER NEWSLETTER 2023


**Volume: 1** **Issue: 4**

## பாரத சாரண சாரணியர் இயக்க தேசிய பயிற்சி முகாம் (SCOUT)

நமது ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப்பள்ளியின் **தாளாளர்** Dr. S.M. **ஜெகதீசன்**, **செயலாளர்** K. **சுப்பிரமணியம்**, **பொருளாளர்** K. **புகழேந்தி** **மற்றும் பள்ளி முதல்வர்** P. **சந்திரசேகரன்** ஆகியோரது அனுமதியுடன் நம் பள்ளியின் பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாணவர்கள் **S.K.** பவித்ரகுகன் **(9-D)**, **N.** ஆத்திப் **(9-C)**, **B.** சாய்சஞ்சீவ் **(8-C)**, **P.** இனிஷ் **(8-C)**, **S.M.** சஞ்சய் **(7-B)** ஆகிய மாணவர்கள் மத்தியப் பிரதேசத்தில் உள்ள National Adventure Institute - இல் நடைபெற்ற பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் பயிற்சி முகாமிற்கு ஈரோடு மாவட்ட செயலாளர். திரு. ரவி விஜயதுரை அவரது தலைமையில் நம் பள்ளி பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் பொறுப்பாளர் R. செந்தில் மற்றும் S. தீபா ஆகியோரது ஏற்பாட்டில் சென்று கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கு அக்டோபர் 1-ஆம் தேதி புறப்பட்டு தொடர்வண்டியில் பயணம் செய்து அக்டோபர் 4 -ஆம் தேதி மத்தியப் பிரதேசம் சென்று 04.10.2023 முதல் 16.10.2023 வரை நடைபெற்ற பயிற்சியில் பங்கு கொண்டனர்.

**பயிற்சி முகாம் நிகழ்வுகள்:**

1. 04.10.2023 - கொடியேற்றப் பயிற்சி காலையில் சாரண சாரணிய மாணவர்களுக்கு Trekking - க்கான அறிவுரைகள் வழங்கப்பட்டது. அதன் பின்னர் கொடியேற்றும் பயிற்சி அளிக்கப்பட்டு நம் பள்ளியின் மாணவன் S.K. பவித்ரகுகனுக்கு அப்பயிற்சி முகாமில் கொடியேற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் சாரண சாரணியர் பாடல் (வந்தே மாதரம்) பாட பயிற்சி வழங்கப்பட்டது.

2. 05.10.2023 - நடைப்பயிற்சி நம் பள்ளி மாணவர்கள் நடைப்பயணம் மேற்கொண்டு ஜடாசங்கர் கோவிலை அடைந்து தரிசனம் செய்தனர். அங்கு சுற்றிப் பார்த்துவிட்டு வந்த பிறகு மாலையில் நடைப்பயிற்சி அளிக்கப்பட்டது. அதோடு இரவில் Camp Fire நடைபெற்றது. இதிலும் நம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

3. 06.10.2023 அன்று மையங்களைச் சுற்றிப்பார்த்தனர் அன்று மதியம் Bee falls சென்று அருவியின் அழகைக் கண்டு களித்தனர். அதன் பிறகு மாலை நேரத்தில் Adventure பயிற்சிகளும் நடந்தன.






4. 07.10.2023 - Rope walking அதிகாலையில் பயிற்சி முகாமில் மலை ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டது. அதில் நம் பள்ளி மாணவர்கள் சிறப்பாக மலை ஏறும் பயிற்சி மேற்கொண்டு பாராட்டுப் பெற்றனர். அதனைத் தொடர்ந்து படகுப்பயணம் சென்றனர். பின்னர் Bison lodge - அருங்காட்சியகம் சென்று பார்த்துவிட்டு Pandava Cave என்ற சுற்றுலாதளத்தைக் கண்டு பிரமித்தனர்.

5. 08.10.2023 - Ready for Archery பாரத சாரண சாரணியர் இயக்கப் பயிற்சி முகாமில் உள்ள பயிற்சியாளர்களுக்கு நம் பள்ளி மாணவர்கள் சிற்றுண்டி வழங்கிச் சிறப்பித்தனர். அன்று காலை 10.00 மணியளவில் நடைபயணம் மேற்கொண்டு Mahadev கோவிலுக்குச் சென்றனர். அக்கோயில் 1400 படிகளைக் கொண்டதால் மாணவர்கள் அனைவராலும் படி ஏறிச் செல்ல முடியவில்லை, இருப்பினும் நம் பள்ளி மாணவர்கள் 5 பேரும் மிகப்பெரும் ஊக்கத்தோடு 1400 படிகளையும் கடந்து முதலாவதாக கோவிலை அடைந்து வழிபட்டனர்.

6. 9.10.2023 - Shooting and Horse Riding மாணவர்களுக்கு காலை முதல் வில்அம்பு பயிற்சி, குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், சிலம்பம் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டது. அன்றிரவு Grand Camp Fire நிகழ்ச்சியில் ஒயிலாட்டம் மற்றும் பரதநாட்டியம் ஆகியன நடைபெற்றது.

7. 10.10.2023 - சான்றிதழ் வழங்குதல் பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட நம் பள்ளி மாணவர்களுக்கு முகாமின் நிறைவு உரை வழங்கி இப்பயிற்சிக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

8. 11.10.2023 அன்று பயிற்சி நிறைவுற்று மத்தியப் பிரதேசத்திலிருந்து டெல்லிக்குப் பயணம் செய்தனர். மாலையில் டெல்லியை அடைந்து அங்குள்ள கடைவீதிகளைச் சுற்றிப்பார்த்தனர்.

9. 12.10.2023 - Rastrapathi Bhavan and Parliament Visiting (பார்வையிடல்) டெல்லியில் காலை Rastrapathi Bhavan சென்று மையப்பகுதி கட்டிடத்தைப் பார்வையிட்டு பின்னர் India Gate ஆகியவற்றையும் பார்த்து மகிழ்ந்தனர். அதோடு National Head Quarters சென்று, கண்டு களித்தனர்.



10. 13.10.2023 அன்று நம் பள்ளி மாணவர்கள் அதிகாலை நேரத்தில் அக்சர்தம் கோவில் சென்று வழிபட்டுவிட்டு அதன்பிறகு செங்கோட்டை சென்று சுற்றிப் பார்த்தனர். பின்னர் ஓய்வு எடுத்துக்கொண்டனர்.



11. 14.10.2023 - பயிற்சி நிறைவு பாரத சாரண சாரணியர் இயக்கப் பயிற்சியானது மத்தியப்பிரதேசத்தில் தொடங்கி டெல்லியில் நிறைவு பெற்றது. அதன்பிறகு டெல்லியிலிருந்து சென்னை நோக்கி புறப்பட்டனர்.

12. 15.10.2023 & 16.10.2023 - State Head Quarters

15.10.2023 அன்று டெல்லியிலிருந்து புறப்பட்ட நம் பள்ளியின் பாரத சாரண சாரணியர் குழுவானது 16.10.2023 அன்று சென்னையை வந்தடைந்தனர். அங்குள்ள State Head Quarters - யை பார்த்துவிட்டு மெரினா கடற்கரைக்குச் சென்றனர். அங்கு கடலின் ஆர்ப்பரிக்கும் அலைகளில் கால் நனைத்து சிறிதுநேரம் செலவிட்டு பின்னர் நமது ஊர் நோக்கி பயணித்து வந்தடைந்தனர்.

நம் பள்ளிமாணவர்கள் பாரத சாரண சாரணியர் இயக்கப் பயிற்சி முகாமிற்குச் செல்ல அனுமதியளித்த நமது பள்ளியின் தாளாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் முதல்வர் ஆகியோருக்கும் இப்பயிற்சி முகாமினை வழிநடத்திக் கொண்டு சென்ற பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் ஈரோடு மாவட்ட செயலாளருக்கும் மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்

**- Mr. P. விஜயகுமார், BT Asst. in Tamil**





# நாட்டுநலப்பணித்திட்ட சிறப்புமுகாம்

நாட்டுநலப்பணித்திட்ட முகாம் கோபிபாளையம் பகுதியில் 30.09.2023 முதல் 06.10.2023 நடைபெற்றது. நாட்டுநலப்பணித்திட்ட முகாமை 30.09.2023 அன்று பள்ளியின் தாளாளர் மதிப்பிற்குரிய **திருமதி ரேவதி ஜெகதீசன்** அவர்கள் தலைமை தாங்கி முகாமைத் துவக்கி வைத்தார். பள்ளியின் தாளாளர் மதிப்பிற்குரிய **Dr. S.M. ஜெகதீசன்** அவர்கள் மாணவர்களுக்குத் தலைமை உரை ஆற்றினார். இவர் தமது உரையில் “மாணவர்கள் சமூகத்தைப் பற்றிய அக்கறை உணர்வோடும், பொறுப்புணர்வோடும் விழிப்புணர்வோடும் வாழ கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மாணவர்களால் மட்டுமே நாட்டையும், சமுதாயத்தையும் வளர்ச்சிப்பெற வைக்க முடியும் என்று தலைமை உரை வழங்கிச் சிறப்பித்தார். பள்ளியின் செயலாளர் மதிப்பிற்குரிய **திரு. க. சுப்பிரமணியம்** அவர்கள் நிகழ்ச்சியில் முன்னிலை வகித்த மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். இவர் தமது உரையில், “மாணவர்கள் தங்களது நாட்டுப்பற்றை, நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் செய்யும் சேவையின் மூலம் பிறர்க்கு உணர்த்தி அவர்களுக்கு தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார் பள்ளியின் பொருளாளர் மதிப்பிற்குரிய **திரு. க. புகழேந்தி** அவர்கள் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். இவர் தமது உரையில், “மாணவர்கள் சமுதாயக் கடமைகளோடு தங்களை இணைத்துக் கொண்டு நாட்டைப் பாதுகாக்கும் உயரிய நோக்கோடு செயல்படவேண்டும் என்று கூறினார். பள்ளியின் முதல்வர் மதிப்பிற்குரிய **திரு. பெ. சந்திரசேகரன்** அவர்கள் தமது வாழ்த்துரையில் ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய மனதில் தேசப்பற்றை வளர்த்துக்கொண்டால்தான் சமுதாயத்தின் வளர்ச்சி உயர்ந்த நிலையைப் பெறும் என்று மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்.









கோபிபாளையம் தூயதிரேசாள் முதனிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் **திரு. அ. தாமசு** அவர்கள் மாணவர்களுக்குச் சிறப்புரை வழங்கினார். இவர் மாணவர்கள் தங்களுடைய தாய் நாட்டின் மீது மிகுந்த அன்பும், பக்தியும் கொண்டு உழைத்தால் தேசம் சிறப்புற்று விளங்கும் என்று சிறப்புரை வழங்கிச் சிறப்பித்தார். முகாம் உதவித்திட்ட அலுவலர் திரு . ஈ. சக்திவேல் நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

1.10.2023 அன்று மாணவர்கள் கோபிபாளையம் தூய திரேசாள் பள்ளி வளாகத்தைத் தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர். மாலை 4.00 மணிக்கு சமுதாய சீர்கேடுகளிலிருந்து மாணவர்கள் தங்களைக் காக்கும் பொருட்டு "எதிர்த்து நில்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது இந்நிகழ்ச்சியின் திட்ட அலுவலர் **திரு. கே. சி கிருஷ்ணசாமி** அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பள்ளியின் முதுகலை கணினி ஆசிரியர் **திரு. ந.ச. சக்திவேல்** அவர்கள் இந்நிகழ்விற்கு முன்னிலை வகித்து மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். இவர் தமது உரையில் சமுதாயத்தின் கண்களாகிய மாணவர்கள் சமுதாயத்திற்காகப் பணியாற்றுவதை நோக்கமாக கொள்ள வேண்டும்" என்றும் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார். மதிப்பிற்குரிய **திரு. அ. மோகனசுந்தரம்** அவர்கள் ஆற்றிய தலைமையுரையில் சமுதாயத்தைச் சீரழிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடாமல் அதனை எதிர்த்து நிற்கும் மனவலிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டு செயலாற்ற வேண்டும் என்றும் மாணவர்களுக்கு தலைமையுரை ஆற்றிச் சிறப்பித்தார். கோபி உதவிப் பேராசிரியர் மதிப்பிற்குரிய **முனைவர் எஸ். பிரதீப்குமார்** அவர்கள் சிறப்புரையாற்றினார். தமது சிறப்புரையில், சமுதாய ஒற்றுமையைப் பாதிக்கும் சீர்கேடான செயல்களை எதிர்த்துநின்று நாட்டின் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று சிறப்புரை வழங்கிச் சிறப்பித்தார். முகாமின் உதவித்திட்ட அலுவலர் **திரு. ஈ. சக்திவேல்** அவர்கள் நன்றியுரை கூற நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.








2.10.2023 அன்று நடைபெற்ற நாட்டு நலப்பணித்திட்ட முகாமில் ஊர்ப்பொதுமக்கள் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்தனர். மாலை 4.00 மணிக்கு காந்தி ஜெயந்தியை முன்னிட்டு 'காந்தியடிகளும் இயற்கையும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் வரவேற்புரையை வழங்கினார். முகாமின் உதவித் திட்ட அலுவலர் திரு. ஈ. சக்திவேல் அவர்கள் இந்நிகழ்ச்சியில் தலைமை உரை ஆற்றிச் சிறப்பித்தவர் கெட்டிச்செவியூர் அரசுமேல்நிலைப் பள்ளி முதுகலை வேதியியல் ஆசிரியர் **திரு. ஜி. என். சந்திரசேகரன்** அவர்கள். இவர் தமது உரையில், 'கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு" என்று காந்தியடிகள் இயற்கையைப் போற்றிய வழியில் மாணவர்களும் இயற்கை வளங்களின் முக்கியத்துவத்தை அறிந்து, இயற்கையைப் பாதுகாத்து நாட்டை வளம் பெறச் செய்ய வேண்டும் என்று தலைமை உரை ஆற்றிச் சிறப்பு செய்தார்.





இயற்கை அலுவலர் **திரு. ச. கார்த்திகேயன்** அவர்கள் இயற்கையின் அவசியத்தை உணரும் வகையில் சிறப்புரை ஆற்றினார். திட்ட அலுவலர் கே.சி. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றியுரை கூற நிகழ்ச்சி இனிதே நிறைவுபெற்றது.





3.10.2023 அன்று நடைபெற்ற நாட்டு நலப்பணித்திட்ட முகாமில் கோபிபாளையம் ஊரின் பல பகுதிகளில் இருந்த முட்புதர்ச்செடிகள், பார்த்தீனியச் செடிகளை மாணவர்கள் அப்புறப்படுத்தி தூய்மைப் படுத்தினர். மாலை 4.00 மணிக்கு மாணவர்கள் தலைமைப் பண்பை ஊக்குவிக்கும் பொருட்டு "உன்னையே நீ அறிவாய்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. குருமந்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் தலைமையாசிரியர் மதிப்பிற்குரிய **திரு. எம். எம். ரெங்கசாமி** அவர்கள் தலைமையுரை ஆற்றினார். இவர் தமது உரையில் "நாமே நமக்குத் துணையானால் நற்புகழ் நம்மைத் தேடிவரும்" என்பதை உணர்ந்து தன்னை அறிவதால் தனக்குள் இருக்கும் நல்ல பண்புகளை அறிந்து வளர்த்துக் கொள்ளமுடியும் என்றும் நல்ல பண்புகளோடு வாழ்வை முன்னேற்றப்படுத்திக் கொள் என்றும் தலைமை உரை ஆற்றிச் சிறப்பித்தார்.





4.10.2023 அன்று நடைபெற்ற நாட்டு நலப்பணித்திட்ட முகாமில் மாணவர்கள் அளுக்குளி செல்லாண்டியம்மன் திருக்கோயில் வளாகப் பகுதியைத் தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர். மாலை 4.00 மணிக்கு மாணவர்களுக்கு சமுதாயத்தையும் தன்னம்பிக்கையும் ஊக்குவிக்கும் பொருட்டு 'சிறகைவிரி' என்ற தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்வில் உதவி திட்ட அலுவலர் திரு. ஈ. சக்திவேல் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். ஸ்ரீ குருகுலம் கல்வி அறக்கட்டளை இயக்குநர்கள் பொறியாளர் மதிப்பிற்குரிய **திரு. வடிவேலு** அவர்கள் இந்நிகழ்வில் முன்னிலை வகித்து மாணவர்களைப் பாராட்டினார். பொறியாளர் மதிப்பிற்குரிய **திரு. செல்வம்** அவர்கள் சிறப்புரையாற்றினார். இவர் தமது உரையில் “நாட்டின் முன்னேற்றம் எதிர்கால மாணவர்களின் கைகளில் தான் உள்ளது, நாட்டிற்கு நலம் தரக் கூடிய செயல்களைச் செய்வதற்கு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்” என்று சிறப்புரை வழங்கிச் சிறப்பித்தார். முகாம் திட்ட அலுவலர் திரு. கே.சி. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.








































05.10.2023 அன்று நடைபெற்ற நாட்டுநலப்பணித்திட்ட முகாமில் கோபிபாளையம் தூயதிரேசாள் பள்ளி பகுதியில் பள்ளி மாணவர்கள் மற்றும் உள்ளூர் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் உடற்பயிற்சி செய்யும் இரும்பு கம்பங்களுக்கு மாணவர்கள் வர்ணம் பூசி நிலை நிறுத்தினர். மாலை 4.00 மணிக்கு மாணவர்கள் தங்கள் திறனை மேம்படுத்தும் பொருட்டு “எழுந்து ஒளி வீசு” என்ற தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திட்ட அலுவலர் திரு. கே.சி. கிருஷ்ணசாமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். போத்தம்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியை **திருமதி என். செந்தில்வடிவு** அவர்கள் இந்நிகழ்ச்சியை தலைமையேற்று மாணவர்கள் “சமூகப் பணியை ஆற்றும் மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்” என்று வலியுறுத்தினார். கோபிபாளையம் தூயதிரேசாள் முதனிலைப்பள்ளி தாளாளர் மதிப்பிற்குரிய **அருட்திரு. அந்தோணி லாரன்ஸ்** அவர்கள் சிறப்புரையாற்றினார். இவர் தமது உரையில் “சமுதாயத்தை மேம்படுத்துவதற்குரிய திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்” என்று மாணவர்கள் எழுச்சி பெறும் வகையில் சிறப்புரை வழங்கிச் சிறப்பித்தார். முகாமின் உதவித்திட்ட அலுவலர் ஈ. சக்திவேல் அவர்கள் நன்றியுரை வழங்கனார்.



## தூய்மை பணியில் மாணவர்கள்

கோபி குருகுலம் மேல்நிலைப்பள்ளியின் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் கோபிபாளையம் பகுதியில் நடைபெற்றது. இதையொட்டி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், கோபிபாளையம் பகுதியில் தூய்மை பணியில் ஈடுபட்டபோது எடுத்த படம்.










6.10.2023 அன்று நடைபெற்ற நாட்டுநலப்பணித்திட்ட முகாமில் கோபிபாளையம் தூயதிரேசாள் பள்ளி வளாகத்தில் உள்ள மரங்களுக்குப் பாத்தி கட்டப்பட்டு நீர் ஊற்றப்பட்டது. மேலும் பள்ளியின் அனைத்துப் பகுதிகளும் தூய்மைப் படுத்தப்பட்டு களப்பணி நிறைவு பெற்றது. மாலை 4.00 மணிக்கு நாட்டுநலப்பணித்திட்ட முகாம் நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு முகாம் உதவித்திட்ட அலுவலர் திரு ஈ. சக்திவேல் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கோபிபாளையம் தூயதிரேசாள் முதனிலைப் பள்ளித் தலைமையாசிரியர் **திரு. அ. தாமசு** அவர்கள் தலைமை தாங்கி மாணவர்களின் ஏழு நாள் சிறப்பு முகாம் சேவையைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். நிறைவாக முகாம் அலுவலர் திரு. கே.சி. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றியுரை வழங்க சிறப்பு முகாம் விழா இனிதே நிறைவு பெற்றது.

**- Mrs. S. தமிழச்செல்வி, PG Asst. in Tamil**

# CLASS OF THE WEEK

**"Never stop learning Because life Never stops Teaching"**

Learning another language is not only learning different words for the same things, but learning another way to think about things. We awarded the shield for the class of the week for the classes 9-B and 7-A. They were awarded by the Principal with their class teachers for good spoken English on 6th October in our assembly.

- **P. JAYANTHI,** BT in English





# SPORTS ACHIEVEMENTS

Our Gobi Educational District conducted Zonal Level Competitions in various places such as Saratha Techno School, Saratha Matric. Hr. Sec. School, Nambiyur Kumutha Matric. Hr. Sec. School, Gobi Arts & Science College. In these competitions, Our school students participated in various games and achieved 72 Gold medals, 20 Silver medals & 17 bronze medals. Our School student B. Gunalakshmi from 12-C Participated in State Level Chess Competition under 19 category conducted at Vellore District. She also got Second place in District Level Chess Competition Under 19 category held at Bharathidhasan College, Chithode. Our School Chairman Dr. S.M. Jagatheesan Sir, Our Secretary Mr. K. Subramaniam Sir, Our Treasurer Mr. K. Pugalenthi Sir and Principal Mr. P. Chandrasekaran sir congratulated and distributed the awards and medals for the students who achieved in various competitions and showed their excellence skillfully in the sports The teachers and students appreciated all the winners.




**Gunalakshmi. B 12-C**
Participated in State level Chess Competition and 2nd Place in District Level Chess Competition Under 19 Category.

# SPORTS ACHIEVEMENTS

| Game & Category | Student Details | Place |
|---|---|---|
| Under 17 Boys Shot-put throw | Vedaviyas. M, 10-C | 3rd Place |
| Under 19 Boys 110 Hurdles | Mohammed Hasim. J, 12-D | 3rd Place |
| Under 17 Boys – Judo | Yaswanth.D, 11-D | 3rd Place |

**Under 19 Boys – Throw Ball 3rd Place**

| | | | |
|---|---|---|---|
| 1. Chittesh.M | -12-B | 7. Sabareesh.C | - 12-F |
| 2. Mytheeswaran.S | -12-B | 8. Mebinesh.P | - 12-D |
| 3. Sethupathi.A | -12-B | 9. Abinesh . S | - 11-D |
| 4. Sankeerthan.S | -12-D | 10. Deepak.K | - 9-C |
| 5. Sangeeth.M | -12-D | 11. Sathya Prakash.E | - 7-B |
| 6. Pranav M.S | -10-C | 12. Harish.M | - 9-C |










# SPORTS ACHIEVEMENTS

























# SPORTS ACHIEVEMENTS

| Game & Category | Student Details | Place |
|---|---|---|
| 17 Category Boys - Beach Volley Ball | Akaash.R - 11-B | 3rd Place |
| | Vibakar.S - 12-B | |
| Under 17 Boys Shot-put throw | Vedaviyas.M - 10-C | 1st Place |
| Under 19 Boys Shot-put throw | Karmugilan.M - 12-B | 1st Place |
| Under 19 Boys 100 meter | Mohammed Hasim.J - 12-D | 2nd Place |
| Under 19 Boys 110 Hurdles | | 2nd Place |
| Under 17 Girls Triple Jump | Archana.G - 11-C | 2nd Place |

| UNDER 19 GIRLS – FOOTBALL TEAM | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. Vedharajeshwari.D.S | - | 11-B | 10. Bavatharani.T | - | 11-C |
| 2. Janani Sri. G.K | - | 11-B | 11. Thivya Sruthi.G.D | - | 11-C |
| 3. Swathi.K.S | - | 11-B | 12. Vijayakumari.V | - | 11-C |
| 4. Shaziya Sulthana.J | - | 11-B | 13. Vikashni.R | - | 11-C |
| 5. Eniya.H | - | 11-B | 14. Neelam Kamar.A.H | - | 11-C |
| 6. Suvetha.S | - | 11-B | 15. Srimathi.L | - | 11-C |
| 7. Abi sri.S | - | 11-B | 16. Tamilarasi.R | - | 11-C |
| 8. Pooja.P | - | 11-B | 17. Varsha.S | - | 11-F |
| 9. Dharshini.P | - | 11-C | 18. Indhu Subha.S | - | 11-A |





# SPORTS ACHIEVEMENTS

| UNDER 17 GIRLS – THROW BALL | | | |
|---|---|---|---|
| 1. Kanisha.A | 11-B | 7. Menaga sri.P | 11-B |
| 2. Bhargavi. S | 11-C | 8. Kesika.J | 11-B |
| 3. Keerthana.S | 11-C | 9. Govarthini.S | 11-C |
| 4. Janani Prabha.M | 11-A | 10. Viveka.S.P | 10-D |
| 5. Poorna Sakthi.S | 11-B | 11. Arthika.P | 9-A |
| 6. Nikila Jasmine.K | 11-B | 12. Deekshaa.S.D | 9-A |

| UNDER 17 GIRLS – THROW BALL | | | |
|---|---|---|---|
| 1. Kiruba Sri.M | 12-C | 2. Divya Sri.K | 11-C |

| UNDER 19 BOYS – KHO-KHO | | | |
|---|---|---|---|
| 1. Mohammed Hasim.J | 12-D | 7. Sree Dharsan.L | 12-E |
| 2. Karthikeyan.K | 12-D | 8. Phaneesh.T | 12-F |
| 3. Kreeth.J | 12-B | 9. Praveen.A | 11-B |
| 4. Gokulkrishnan.R | 12-B | 10. Manoranjan.M | 11-F |
| 5. Sachin.N | 12-B | 11. Hemavasudevan T.S | 10-B |
| 6. Nikil.S | 12-F | 12. Vidhya Sagar.V.K | 10-C |










# SPORTS ACHIEVEMENTS

| UNDER 14 BOYS – KHO –KHO | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. Moulishwaran.T.P | - | 9-C | 7. Yeshwanth.B | - | 9-B |
| 2. Sai Sanjeev.B | - | 8-B | 8. Arthik.M | - | 7-A |
| 3. Anish.M | - | 7-A | 9. Nivas.B | - | 8-C |
| 4. Sibi.P | - | 8-B | 10. Nideesh.C | - | 9-C |
| 5. Naren Pranav.E | - | 8-C | 11. Nitheshwaran.T.P | - | 8-C |
| 6. Sri Gugan.R | - | 9-D | 12. Nishanth.M | - | 9-D |

| UNDER 19 BOYS – THROW BALL | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. Chittesh.M | - | 12-B | 7. Sabaresh.C | - | 12-F |
| 2. Mytheeswaran.S | - | 12-B | 8. Mebinesh.P | - | 12-D |
| 3. Sethupathi.A | - | 12-B | 9. Abinesh.S | - | 11-D |
| 4. Sankeerthan.S | - | 12-D | 10. Deepak.K | - | 9-C |
| 5. Sangeeth.M | - | 12-D | 11. Sathya Prakash.E | - | 7-B |
| 6. Pranav M.S | - | 10-C | 12. Harish.M | - | 9-C |





# SPORTS ACHIEVEMENTS

| | | | |
|---|---|---|---|
| **Under 17 Girls – Badminton (singles)** | Divya Sri.K | - | 11-C |
| **Under 19 Boys – Badminton (singles)** | Logith .M | - | 12-D |
| **Under 19 Boys – Badminton (doubles)** | Logith.M | - | 12-D |
| | Dhakshinesh.R | - | 11-D |

**Under 17 Boys – Volley ball**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. Akash.R | - | 11-B | 7. Niranjan.M | - | 10-C |
| 2. Akshay.R | - | 11-D | 8. Sanjay.K | - | 10-C |
| 3. Karthikeyan.S | - | 11-A | 9. Paul Nikson.B | - | 10-C |
| 4. Soundhra Raj.K | - | 11-D | 10. Manikandan.B | - | 11-F |
| 5. Prabhu Deva.N | - | 10-C | 11. Sabaribalan.G | - | 12-E |
| 6. Sanjay.S | - | 10-C | 12. Kannan.S | - | 11-F |



**- Mr. M. Satheesh, PG Asst. in English**








"Good food is the foundation of genuine happiness"

To promote healthy Food habits among our school children our school Science Club Teahers Mrs.B.Sathyapriya, Mrs.R.Gomathi, Ms.E.Tharani, Mrs. R.Rohini, Ms.T.Mohanapriya and Students organized a **"Food Festival"** on 14th October, 2023. The event started at 9.30 a.m. It was inaugrated by our Chairman Dr. S. M. Jagatheesan sir, Treasurer Mr. K. Pugalendhi sir along with our principal Mr.P. Chandrasekran sir. There was a display of different variety of salads and fireless made food, everything done by our students. From I std to IX std teachers and students visited the feast and enjoyed the delicacies. The participated students served their food with love and care. Some of the foods arrayed are,

* Bread sandwich
* Lemon juice
* Fruit salad with custard milk
* Carrot & coconut spicy mix
* Aval with jaggery
* Dates balls with nuts
* Bread malai and more.

The students were congratulated and appreciated by our Chairman sir, Treasurer sir, Principal sir, Teachers and Students.

**- Mrs. M. Vidhya Sree, BT Asst. in English**





# FOOD FESTIVAL

















# FOOD FESTIVAL















# RHAPSODY INTER SCHOOL COMPETITION

14.10.2023 அன்று, அமலா மேல்நிலைப்பள்ளியின் முன்னால் மாணவர்கள் சங்கம் Rhapsody inter school competition யை நடத்தினார்கள். அதில் நம் பள்ளி மாணவ மாணவியர்கள் 29 நபர்கள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

இதில் நம் பள்ளி மாணவர்கள் மூன்று போட்டிகளில் பரிசுகளைப்பெற்று நம் பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

**பரிசுகளின் விபரம்**

| போட்டி | பரிசு பெற்ற மாணவ மாணவியர்கள் பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| கட்டுரைப் போட்டி | S. தன்யா ஸ்ரீ - 8 - அ | முதல் பரிசு |
| மாறுவேடப் போட்டி | M.S. பரணிகா - 8 - அ | மூன்றாம் பரிசு |
| குழு நடனம் | M. தாரிகா - 9 - ஆ<br>S. லிவிதா - 9 - அ<br>G.S. ரிதன்யா - 9 - ஆ<br>A. வினோதா - 9 - ஆ<br>K. யுவ ஸ்ரீ - 9 - ஆ | இரண்டாம் பரிசு |

பரிசு பெற்ற மாணவிகளுக்கு நமது பள்ளித் தாளாளர், செயலாளர், பொருளாளர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்களது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

**- Mrs. M.S. வாசுகி, SG Teacher in Tamil**







# தன்னம்பிக்கை எழுச்சி உரை

நமது பள்ளியில் 14.10.2023 அன்று மாணவர்களுக்கு தன்னம்பிக்கை உணர்வை வளர்க்கும் விதமாக தன்னம்பிக்கை எழுச்சி உரை நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கியது. முதுகலைப் பொருளியல் ஆசிரியர் திரு. N. மனோகரன் அவர்கள் இந்நிகழ்வின் வரவேற்புரையினை வழங்கினார்.

பள்ளியின் செயலாளர் உயர்திரு. K. சுப்பிரமணியம் மற்றும் பொருளாளர் உயர்திரு. K. புகழேந்தி ஆகியோர் நிகழ்விற்கு தலைமையேற்றனர். பள்ளியின் முதல்வா திரு. P. சந்திரசேகரன் அவர்கள் நிகழ்வின் தலைமை உரையை வழங்கினார்.

பள்ளியின் தாளாளர் உயர்திரு. Dr. S.M. ஜெகதீசன் அவர்கள் நிகழ்வின் சிறப்புரையினை வழங்கிச் சிறப்பு செய்தார். சிறப்பு விருந்தினர் உயர்திரு. நீ.வ. கருப்புசாமி M.A., M.Phil., B.Ed., PhD., (Gobi Arts & Science College) ஐயா அவர்களுக்கு நமது பள்ளியின் தாளாளர் அவர்கள் பொன்னாடை அணிவித்தும் பொருளாளர் அவர்கள் நினைவுப் பரிசை வழங்கியும் கௌரவித்தனர்.

பின்னர் நமது சிறப்பு விருந்தினர் **உயர்திரு. நீ.வ. கருப்புசாமி** M.A., M.Phil., B.Ed., PhD., அவர்கள் **"எண்ணமே ஏற்றம் தரும்"** என்னும் தலைப்பில் மிகச் சிறப்பானதொரு தன்னம்பிக்கை எழுச்சி உரையினை மாணவர்களுக்கு வழங்கினார்.

"ஆசிரியருக்கும் - குழந்தைகளுக்குமான உறவு எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் தாய் - குழந்தை உறவு எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் பெற்றோர் - குழந்தைக்குமான உறவு எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் பெற்றோர்களே குழந்தைகளுக்கு முதல் குருவாக இருந்து வாழ்க்கையைச் செம்மைப் படுத்துகிறார்கள்" என்றும் மாணவர்கள் உயர்ந்த குறிக்கோளோடு வாழ வேண்டும் என்றும் அறிவுரைகளை வழங்கினார்.

"திறமையைச் சரியாகப் பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெற வேண்டும்" என்றும் மாணவர்களிடையே தன்னம்பிக்கை உணர்வை ஊட்டினார்.

பள்ளியின் இடைநிலைப் பொறுப்பாசிரியர் திரு. M. லட்சுமணன் அவர்கள் நன்றியுரை வழங்க தேசிய கீதத்துடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

**- திரு. S. பெரியசாமி, PG Asst (Tamil)**

# PARENT TEACHER MEETING

Parent Teacher meeting was conducted on 15.10.2023 from 10AM to 4PM The parents were intimated through the students in advance.

- 80% of the parents attended this meeting
- Interaction between parents, class teachers, subject teachers took place. There was a discussion regarding students performance in individual subjects, students discipline in classrooms and their attendance percentage.
- The progress reports were shown to all the parents and their suggestions were recorded.
- The PTM came to an end with the conclusion that the joint effort, mutual understanding and co-operation of parent and teacher is very important.

**- Ms. K.Vanitha, PG Asst. in English**



# PARENT TEACHER MEETING



# நவராத்திரி விழாக் கொண்டாட்டம்

" பெயர், புகழ், ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி, மனிதாபிமானம், அறிவு, பக்தி மற்றும் சக்தி"

- ஆகிய ஒன்பதும் அருளும் முப்பெரும் தேவிகளுக்கான சிறப்பு பூஜை நமது பள்ளியில் ஒவ்வொரு வருடமும் நவராத்திரி விழா என கொண்டாடப்பட்டு வருகிறது. நவராத்திரி விழாவின் தொடக்க நிகழ்வாக 14.10.2023 சனிக்கிழமை அன்று கொலு வைத்தல் மற்றும் முளைப்பாரி போடும் நிகழ்வு நடைபெற்றது.



- நவராத்திரியின் முதல் நாள் 15.10.2023 ஞாயிறு அன்று பள்ளியின் தாளாளர், செயலாளர், பொருளாளர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ,மாணவிகள் கலந்து கொண்ட மகேஸ்வரி தேவிக்கான பூஜை சிறப்பாக நடைபெற்றது.

- நவராத்திரியின் இரண்டாம் நாள் 16.10.2023 திங்கள் அன்று நமது பள்ளியில் பயிலும் பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவ, மாணவியர்களால் அன்னை ராஜ ராஜேஸ்வரிக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.




- நவராத்திரியின் மூன்றாம் நாள் 17.10.2023 செவ்வாய் அன்று ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர்களால் வராகி தேவிக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.



- நவராத்திரியின் நான்காம் நாள் 18.10.2023 புதன் அன்று மழலையர் வகுப்பு KG மாணவ, மாணவியர்களால் மகாலட்சுமி தேவிக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.



- நவராத்திரியின் ஐந்தாம் நாள் 19.10.2023 வியாழன் அன்று ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களால் வைஷ்ணவி தேவிக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.



- நவராத்திரியின் ஆறாம் நாள் 20.10.2023 வெள்ளி அன்று ஆறு முதல் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களால் அன்னை கௌமாரி தேவிக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.



- நவராத்திரியின் ஏழாம் நாள் 21.10.2023 சனிக்கிழமை அன்று அனைத்து நிலையில் (KG to +2) உள்ள ஆசிரியர்களாலும் சாம்பவிதேவிக்குப் பூஜை சிறப்பாக நடைபெற்றது.
- நவராத்திரியின் எட்டாம் நாள் 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று அலுவலகப் பணியாளர்களால் நரசிம்ம அன்னைக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.




- நவராத்திரியின் ஒன்பதாம் நாள் 23.10.202 திங்கள் அன்று பள்ளி நிர்வாகம் மற்றும் அனைத்து நிலைப்பணியாளர்களாலும் சரஸ்வதி தேவிக்குப் பூஜை சிறப்பாக நடைபெற்றது.


















- நவராத்திரியின் பத்தாம் நாள் 24.10.2023 செவ்வாய்க் கிழமை அன்று விஜயதசமியை முன்னிட்டு, நமது பள்ளியில் மழலையர் வகுப்புகளுக்கான குழந்தைகள் சேர்க்கை நடைபெற்றது.

- அதில் பள்ளி நிர்வாகத்தின் தாளாளர், செயலாளர், பொருளாளர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டு பூஜையைச் சிறப்பித்தனர்.

- விஜயதசமியை முன்னிட்டு நமது பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்கள் நன்கு கல்விகற்று வாழ்வில் மேன்மை அடைய நவராத்திரி விழா 15.10.2023 முதல் 24.10.2023 வரை பெற்றது. அதற்கு அபிஷேகப் பொருட்கள் மற்றும் பிரசாதம் வழங்கி சிறப்பித்த அனைத்து பெற்றோர்களுக்கும் ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப்பள்ளி தாளாளர், செயலாளர், பொருளாளர் முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- Mrs. C. சுமதி, SGT in Tamil**

# விஜயதசமி

24.10.2023 செவ்வாய்க் கிழமை அன்று நமது பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்கள் நன்கு கல்விகற்று வாழ்வில் மேன்மை அடைய விஜயதசமியை பூஜை சிறப்பாக நடைபெற்றது.

விஜயதசமி பூஜையில் குழந்தைகளுக்கு அக்ஷராப்பியாசம் செய்வித்து மழலையர் வகுப்புகளுக்கான குழந்தைகள் சேர்க்கை சிறப்பாக நடைபெற்றது.

**- Mr. P. Chandrasekaran, Principal**













# ஆயுதபூஜை

23.10.2023 திங்கட்கிழமை அன்று நமது பள்ளியின் செயலாளர் திரு.K. சுப்பிரமணியம் அவர்கள் நம் பள்ளி பேருந்துகள் மற்றும் கருவிகள் அனைத்திற்கும் ஆயுதபூஜை செய்தார். இவ்விழாவில் பள்ளியின் தாளாளர், பொருளாளர், முதல்வர், ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், பேருந்து பொறுப்பாளர், ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**- Mr. P. Chandrasekaran, Principal**














# ஆன்மீகம் ஓர் அறிமுகப் பயிற்சி

நமது பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு மாணவ-மாணவியர்களுக்கு 20.10.2023 மற்றும் 21.10.2023 ஆகிய இரு தினங்களில் "யோகமும் இளைஞர் வல்லமையும்" என்ற சான்றிதழ் கல்விக்கான அறிமுக வகுப்பு நடைபெற்றது. இதில் மாணவ-மாணவியர்களுக்கு ஆக்கினை தீட்சை, சாந்தி தீட்சை, துரிய தீட்சை மற்றும் காயகல்ப பயிற்சி பேராசிரியர் V. மாணிக்கவாசகம் ஐயா அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. துவக்கவிழாவில் ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப் பள்ளி முதல்வர் திரு. P. சந்திரசேகரன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். ஸ்ரீ குருகுலம் பப்ளிக் பள்ளி முதல்வர் திருமதி S.M கவிதா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தலைமை உரையினை ஸ்ரீ குருகுலம் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் உயர்திரு Dr. S.M. ஜெகதீசன் அவர்கள், செயலாளர் உயர்திரு K.சுப்பிரமணியம் அவர்கள் மற்றும் பொருளாளர் உயர்திரு K. புகழேந்தி ஆகியோர் வழங்கினார்கள். பள்ளியின் யோகா பேராசிரியர்கள் திரு. R.செந்தில் மற்றும் திருமதி S. தேவி ஆகியோர் நன்றியுரை வழங்கினர். மேலும் கோபிசெட்டிப்பாளையம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் தலைவர் அருள்நிதி K.P.நடராஜன் மற்றும் அருள்நிதியர்கள் ஜெயபிரியா, செந்தில்வடிவு, பாலாம்பிகை, சரஸ்வதி ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**- Mr. M. நந்தகோபால், SGT in Tamil**








# Nilavembu Kashayam

**" Nilavembu - nature's remedy,
a herbal elixir to our health"**



**Nilavembu is a herbal tonic that is made from herbs that helps to boost immunity and supports overall body health.**

**"Nilavembu Kashayam Camp" was conducted in our school for three days (October 19, 20, and 21). All the students and teachers were given Nilavembu Kashayam.**



**- P.Jayanthi, BT Asst (English)**









# PEACE POSTER CONTEST

**"Art is a way of survival"**

The international lion's club has organized a drawing competition titled "Peace Poster Contest ". This was announced on basis of creating love and peace in the hearts of youngsters - the future India!. The competition was conducted for students of standard 6th, 7th and 8th. The title for their drawing competition is "Dare to Dream". They have to exhibit their drawings on this title in Bharathi Vidhayalaya Matric Hr. Sec. School on 19.10.2023. 30 students participated from our school in this competition under the guidance of our drawing master Mr. K. Ruthramoorthy.

**- Mrs. M. Vidhyasree, B.T. Asst. in English**

# VACCINATION CAMP

"The Groundwork of All Happiness is Health"

DPT vaccine protects the children against tetanus and diptheria. It also protects teens and adults against whooping cough and prevents the spread of disease to others. So our management arranged a vaccination camp on 26 Oct 2023. VHNs from kottupullampalayam PHC attended and our I std , V std & X std students were vaccinated.











## EDITORIAL BOARD

**Patrons**

Dr. S.M. Jagatheesan, Chairman.
Mr. K. Subramaniam, Secretary.
Mr. K. Pugalendhi, Treasurer.

**Chief Editor**

Mr. P. Chandrasekaran, Principal.

**Joint Editors**

Mrs. S. Thamilselvi, PGT in Tamil.
Mrs. M. Vidhya Sree, BT in English.

**Members**

Ms. K. Vanitha, PGT in English.
Mrs. P. Jayanthi, BT in English.